இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு மக்கள் கூட்டத்தை நோக்கிக் கூறியது: "இறையாட்சியைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம்: நிலத்தில் ஒருவர் விதைக்கிறார். அவர் எதுவும் செய்யாமலே நாள்கள் நகர்ந்து செல்கின்றன. அவருக்குத் தெரியாமல் விதை முளைத்து வளர்கிறது. முதலில் தளிர், பின்பு கதிர், அதன் பின் கதிர் நிறைய தானியம் என்று நிலம் தானாகவே விளைச்சல் அளிக்கிறது. பயிர் விளைந்ததும் அவர் அரிவாளோடு புறப்படுகிறார்; ஏனெனில் அறுவடைக் காலம் வந்துவிட்டது" என்று கூறினார். (மாற்கு 4:26-29)



# இயற்கையைப் பாதுகாப்பது இக்காலத்தின் அவசரத் தேவை

**வத்திக்கான்:** ஜூன் 04, கடந்த வெள்ளி மாலையில் துவக்கப்பட்டுள்ள "சூழலியல் அமைப்பை மீண்டும் நிலைப்படுத்துதல் குறித்த ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் பத்து ஆண்டுகள்" என்ற புதியதொரு திட்டத்திற்குச் செய்தி ஒன்றை அனுப்பியுள் ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

சுற்றுச்சூழல் ஆர்வலரான, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்த புதிய திட்டத்திற்கு அனுப்பியுள்ள செய்தியில், உலக அளவில் சூழலியல் அமைப்புகள் சீரழிந்துவருவதைத் தடுக்கவும், நம் பொதுவான இல்லமாகிய இப்பூமிக்கோளத் தைப் பராமரிக்கவும், இந்த பத்து ஆண்டுத் திட்டம், அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றது என்று கூறப்பட்டுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் நாம் சிறப்பிக்கும் சுற்றுச்சூழல் உலக நாள், உடன்வாழ்கின்ற மனிதர் மீது, நாம் உண்மையான அன்பு செலுத்தவும், நம் சமுதாயம் எதிர் கொள்கின்ற பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு, ஒரே மனதாக நம்மை அர்ப்பணிக்கவும், சூழலியல் மீது உண்மையான அக்கறை காட்டவும் அழைப்பு விடுக்கின்றது என்றும் திருத்தந்தை கூறியுள்ளார்.

வானங்கள் இறைவனின் மாட்சிமையை வெளிப்படுத்துகின்றன; வான்வெளி அவர் தம் கைகளின் வேலைப்பாட்டை விவரிக் கின்றது. ஒவ்வொரு பகலும் அடுத்த பகலுக்கு அச்செய்தியை அறிவிக்கின்றது; ஒவ்வோர் இரவும் அடுத்த இரவுக்கு அதைப்பற்றிய அறிவை வழங்குகின்றது. அவற்றுக்குச் சொல்லுமில்லை, பேச்சு மில்லை; அவற்றின் குரல் செவியில் படுவதுமில்லை (தி.பா.19:1-3) என்ற திருப்பாடல் வரிகளையும் திருத்தந்தை மேற்கோள் காட்டியுள்ளார்.

ஒருவர் ஒருவரையும், பலவீனர்களையும் நாம் பாதுகாக்கவேண்டும், மற்றும், நம் பிள்ளைகளும், வருங்காலத் தலைமுறை களும் வாழ்வதற்கு ஏற்ற பூமிக்கோளத்தை விட்டுச்செல்ல வேண்டியது நம் கடமை என்பதை வலியுறுத்திக் குறிப்பிட்டுள்ள



திருத்தந்தை, இயற்கையும், பல்லுயிரினங் களும் அழிந்து வருவதையும், இப்போதைய பெருந்தொற்றால், இலட்சக்கணக்கான மக்கள் இறப்பதையும் நாம் பார்த்து வருகிறோம் என்று கவலையுடன் கூறியுள்ளார்.

## நம்பிக்கை ஒளி

எனினும், மனிதாபிமானம் கூடுதலாக அமைகின்ற, மற்றும் கூடுதலாக ஒன்றித்துச் செயல்படுகின்ற ஓர் உலகை நம்மால் உருவாக்குவதற்கும், தொழில்நுட்பத்தை முறையாகப் பயன் படுத்துவதற்கும், நமக்குச் சுதந்திரம் உள்ளது என்று கூறியுள்ள திருத்தந்தை, வருகிற நவம்பரில் கிளாஸ்கோ நகரில் நடைபெறவிருக்கும், காலநிலை மாற்றம் பற்றிய உலக உச்சி மாநாடு (நவ.1-12-2021-COP-26) சூழலியல் பாதுகாப்பிற்கு நல்ல தீர்மானங்களை எடுக்கும் என்று, தான் நம்புவதாகத் தெரிவித்துள்ளார்.

மீள்நிலைநிறுத்துதல் என்பது, முதலில் நம்மையே நாம் சீரமைக்க வேண்டும் என்று கூறியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சுழலியலை சீர்நிலைக்கு மீண்டும் கொணர்வதற்கு, கருணை, படைப் பாற்றல், துணிவு ஆகிய பண்புகளைக் கொண்டிருப்போம், தலை முறைகளுக்குத் தகுதியான இடத்தை விட்டுச்செல்வோம் என்று, தன் செய்தியை நிறைவுசெய்துள் ளார்.

UNEP எனப்படும் ஐ.நா.வின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பின் செயல்திட்ட இயக்குனர் Inger Andersen அவர் களுக்கும், FAO எனப்படும், ஐ.நா.வின் உணவு மற்றும், வேளாண்மை அமைப்பின் தலைமை இயக்குனர் Qu Dongyu அவர்களுக்கும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இச்செய்தியை அனுப்பியுள்ளார்.

## சிறுபான்மையினரின் வாழ்க்கைத்தரம் மேம்படுத்தப்பட வேண்டும்

இதற்கிடையில், சிறுபான்மை சமுதாயங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைக் குறைப் பதற்கு, முதலில் அவர்களுக்கு கல்வி கற்க வாய்ப்புக்களை வழங்குவதன் வழியாக, இளையோர், வேலைவாய்ப்புகளைப் பெறவும், அவர்கள், பல்வேறு கலாச்சாரங் கள், இனக் குழுக்கள், மற்றும் மதங்களை மதிக்கவும், அவற்றை புரிந்துகொள்ளவும் உதவமுடியும் என்று திருப்பீடப் பிரதி நிதியான அருள்பணி உர்பான்சிஸ்க் அவர்கள் கூறியுள்ளார்.

இவ்வாறு சிறுபான்மையினர், சமுதாய, மற்றும், அரசியல் வாழ்வில், உயிர்த்துடிப் புடன் பங்கேற்கவும், சகிப்புத்தன்மை மற்றும், பாகுபாடற்ற நிலையில் வளர்ந்து, அமைதி மற்றும், உறுதியான தன்மையின் பாலங்களைக் கட்டியெழுப்பவும், கல்வி யால் உதவ முடியும் என்றும் மேலும் அவர் வலியுறுத்தினார்.

இரண்டாவதாக, ஆண்களுக்கும், பெண் களுக்கும் இடையே சம உரிமைகளுக்கு உறுதி வழங்கப்படுவதன் வழியாக, அரசியல், பொருளாதார, சமூக, மற்றும், கலாச்சார வாழ்வில், பெண்கள், உயிரோட்டத்துடன் பங்கேற்கவும், சம வாயப்புக்களைப் பெறவும் இயலும் என்றும், அருள்பணி உர்பான்சிஸ்க் அவர்கள் எடுத்துரைத்துள்ளார்.

மூன்றாவதாக, மொழி அடிப்படையிலான பாகுபாடுகள் களையப்படுவது, நாடுகளில் சிறுபான்மை சமுதாயங்கள் மேம்படுத் தப்பட உதவும் எனவும், திருப்பீட பிரதிநிதி நிறுவனத்தின் கூட்டத்தில் கூறினார்.

# திருஇருதய ஆண்டவர் -இளையோர் அன்புப் பணி

கோலாலம்பூர்: அணுகிச் செல்லுதல் மானியம் 2020 (Reach Out Grant 2020) எனும் திட்டம் கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் திருமணம் ஆகாத தனிநபர் மற்றும் இளைஞர்களுக்கான அலுவலகத்தால் (ASAYO) ஏற்பாடு செய்யப்பட்டது. கடவுளின் வார்த்தை, நட்பு, நடவடிக்கைகள் மற்றும் வாழ்க்கை அனுபவங்கள் மூலம், உயிருள்ள கடவுளை எதிர்கொள்ள இளைஞர்களுக்கு வாய்ப்புகளை வழங்கு வதற்கான அவர்களின் மறைத்தூதுப் பணியின் ஒரு பகுதியாக மேற்ண்ட திட்டம் ஏற்படுத்தப்ட்டது.

பின்னர், இத்திட்டமானது கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் திருஇருதய ஆண்ட வர் பங்கின் இளைஞர் பணிக்குழுவுற்கு அதன் பங்குத்தந்தை எட்வின் பீட்டர் மற்றும் சகோ. அந்தோணி ரோபர்ட் அவர்களாலும் கடந்த 6 டிசம்பர், 2020-ல் அறிமுகப்படுத் தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அக்காலக் கட்டத்தில், தொற்றுநோயால் பாதிக்கப்பட்டு, அவதியுறுவோரை இளைஞர் கள் தேவையில் உள்ளவர்களை அணுகிச் சென்று உதவுவதை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு, இந்த மானியம் ஏற்படுத்தப்பட்டது.

சகோ. அந்தோணி ராபர்ட், திரு. தாமஸ் பின்னர் இணைந்த சகோ. கேப்ரியல் ஆகியோரால், 10 தன்னார்வ இளைஞர் களைக் கொண்ட சிறு பணிக்குழுவுடன் இத்திட்டம் தொடங்கப்படது. தொடர்ந்து பல தேடல்களுக்குப் பின் கம்போங் பாண்டானிலுள்ள ஆரோக்கிய அன்னை சிறுநீரகச் சுத்திகரிப்பு மையத்தைச் சேர்ந்த ஒருவர் கிடைக்கப்பெற்றார். இந்த நோயாளி சிறுநீரக செயலிழப்பாலும் நீரிழிவு நோயி னாலும், மங்கியப் பார்வையாலும் பாதிக்கப்பட்டிருந்தார். மேலும், வாரத்திற்கு RM100 சிறுநீரகச் சுத்திகரிப்புக்குத் தேவைப்பட்ட்து. எனவே, இவருக்குப் பொருளாதார உதவி பெரிதும் தேவைப் பட்டது. இந்த இளைஞர்குழு ASAYO வழியாகப் பதிவு செய்து, RM1140.00 நன்கொடையாகப் பெற்றனர். பின்னர், திருஇருதய ஆண்டவர் பங்கின் சார்பாக RM1000.00 வழங்கப்பட்டு, மொத்தத் தொகையாக RM2140.00 அந்த நோயாளியின் சிகிச்சைக்கு உதவித் தொகை யாக கொடுக்கப்பட்டது. இதன் வழி, திருஇருதய ஆண்டவர் பங்கின் தமிழ் இளைஞர் பிரிவினர் தங்களது ஆண்டவரின் அன்புப் பணியில் தொடர்ந்து ஈடுபட உறுதிப்பூண்டனர்.



# இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள்!

**திருதந்தையின் வேண்டுகோள்:**

அன்பு சகோதர- சகோதரிகளே, இறை வேண்டல் குறித்த நம் மறைக்கல்வித் தொடரில் இன்று, இறைவேண்டலில் நிலைத்திருப்பதன் முக்கியத்துவம் குறித்து சிந்திப்போம். இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள் (1தெச.5:15-20) என்ற புனித பவுலின் வார்த்தைகளை ஆழ்ந்து தியானித்த திருஅவையின் ஆன்மீக எழுத்தாளர்கள், இடைவிடாது தொடர்ந்து இறைவேண்ட லிலேயே நிலைத்திருப்பது சாத்தியமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளனர்.



கிரேக்க துறவி Evagrius அவர்கள், நாம் நம் தினசரி வேலைகளில் கவனமாக ஈடுபட்டிருந்தாலும், நம் இதயத்தில் இடை விடாது நிலைத்து எரிந்து கொண்டிருக்கும் தீபத்திற்கு, இறைவேண்டலை ஒப்பிடு கிறார்.

இவ்வாறு, இறைவேண்டல், வாழ்வின் பின்னணியில் இருந்துகொண்டு, நம் வாழ்வின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஆழமான அர்த்தத்தை வழங்கிக் கொண்டிருக்கிறது. நமக்கென நேரத்தை ஒதுக்க கடவுளால் முடிகின்றபோது, நாமும் அவருக்கென நேரத்தை ஒதுக்க முடியும். இறைவேண்டலையும் தினசரி பணி களையும் சமநிலைப்படுத்தி, ஆன்மீகப் பலனை அடைய முடியும் என்பதை, ஆழ்நிலை தியான துறவு இல்லப் பாரம்பரியம் நமக்குக் கற்றுத்தருகிறது. இந்த சமநிலைப்பாட்டை நம் வாழ்விலும் ஏற்பதன் வழியாக, நாமும், இறைவனோடு ஒன்றிப்பில் வளர்வதோடு, தெய்வீக அன்பின் நெருப்பு நம் இதயங்களில் தொடர்ந்து எரிந்து கொண்டிருப்பதை காக்க முடியும் என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# திருமணமும் கன்னிமையும்... திருஅவை பார்வையில்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன், 'அன்பின் மகிழ்வு' திருத்தூது அறிவுரை மடலில், 'திருமணத்தில் அன்பு' என்ற 4-ம் பிரிவில், "வன்முறை மற்றும், ஆதாயத்துக் காகப் பயன்படுத்தல்" என்ற தலைப்பின்கீழ் வழங்கியுள்ள 5 பத்திகளைத் தொடர்ந்து, மேலும் ஐந்து பத்திகளை, திருமணமும் கன்னிமையும் என்ற தலைப்பிற்கு அர்ப்பணித்துள்ளார். அதில், முதல் இரண்டு பத்திகளில் (158,159) அவர் கூறியுள்ள கருத்துக்கள் இதோ...

திருமணம் ஆகாத பலர், தங்கள் குடும்பத்திற்கும், நண்பர் வட்டத்திற்கும், திருஅவைக்கும் என, சிறப்பு சேவையாற்று கின்றனர். பல வேளைகளில் இந்தப் பணிகள் அங்கீகரிக்கப்படாமல் போவதால், அவர்கள் தனிமையை உணரும் சூழல்களும் ஏற்படுகின்றன. பலர் தங்கள் திறமைகளை கிறிஸ்தவ நிறுவனங்களில், பிறரன்புச் சேவைகளை ஆற்றவும், தன்னார்வப் பணிகளை மேற்கொள்ளவும் செலவிடுகின் றனர். மற்றவர்கள், திருமணம் புரிந்துகொள்ளாமலேயே, கிறிஸ்துவுக்கும் அயலவருக்கும் என தங்கள் வாழ்வை அர்ப்பணிக்கின்றனர். இவர்களின் அர்ப்பண வாழ்வு, அவர்களின் குடும்பத்தையும், சமூகத்தையும் திருஅவையையும் வளப்படுத் துகின்றது.(அன்பின் மகிழ்வு 158)

கன்னிமை என்பது அன்பின் ஒரு வடிவம். இறையரசின் வருகை குறித்தும், நற்செய் திக்கு நாம் முழு விசுவாசத்துடன் இருக்க வேண்டிய தேவை குறித்தும் (1கொரி.7:32) இந்த அடையாளம் நமக்கு எடுத்துரைக் கிறது. 'உயிர்த்தெழுந்தவர்களுள் யாரும் திருமணம் செய்து கொள்வ தில்லை' (மத்.22:30) என இயேசு எடுத்துரைக்கும் விண்ணகத்தின் பிரதிபலிப் பாக இது உள்ளது. இனியுள்ள காலம் குறுகியதே(1கொரி.7:29) என எடுத்துரைக் கும் புனித பவுல், இயேசுவின் வருகை அருகில் இருப்பதால், அனைவரும் நற்செய்தியை அறிவிக்கவேண்டும் என கேட்பதோடு, கன்னிமை வாழ்வையும் பரிந்துரைக்கிறார்.

அதேவேளை, இது அவருடைய தனிப்பட்ட கருத்து என்பதையும் (1கொரி.7:6-9), மணமாகாதவர்களைக் குறித்து ஆண்ட வரின் கட்டளை எதுவும் என்னிடமில்லை (1கொரி.7:25) என்பதையும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

'ஒவ்வொருவருக்கும் கடவுள் தரும் தனிப்பட்ட அருள்கொடை உண்டு. இது ஒருவருக்கு ஒருவகையாகவும், வேறொரு வருக்கு வேறு வகையாகவும் இருக்கிறது' என ஒவ்வொருவருக்கும் இருக்கும் வேறுபட்ட அழைப்புகள் குறித்தும், புனித பவுல் எடுத்துரைத்துள்ளார் (1கொரி7:7). இந்த சிந்தனைகளின் அடிப்படையில், திருத்தந்தை புனித இரண்டாம் ஜோன் பவுல் அவர்கள், பாலியல் உறவு, துறவின் அடிப்படையில், திருமணத்தின் தாழ்நிலை குறித்தோ, கன்னிமை அல்லது, மணத் துறவின் மேன்மை குறித்தோ, விவிலியப் பகுதியில் காரணங்கள் கூறப்படவில்லை என உரைக்கிறார். கன்னிமையின் மேன்மை குறித்துப் பேசுவதைவிட, ஒவ்வொருவருக்கும் ஓர் அழைப்பு உள்ளது, அவை ஒன்றையொன்று நிறைவு செய்கின்றன என உரைப்பதே சிறப்பாக இருக்கும்.

திருஅவையோடு கிறிஸ்துவின் ஒன்றிப்பு, அல்லது, இயேசுவின் தெய்வீக மற்றும் மனித இயல்புகளின் ஒன்றிப்பு என்ற உண்மை நிலைகளின் அடையாளமாக திருமணம் இருப்பதால், மற்ற அருளடையாளங்களை விட, திருமணம் எனும் அருளடையாளம் உயர்ந்தது என ஹேல்சின் அலெக்ஸாண்டர் அவர்கள் கூறியதை ஓர் எடுத்துக்காட்டாக இங்கு கூறலாம்.(அன்பின் மகிழ்வு 159).

இவ்வாறாக, திருமணம் செய்து கொள் ளாமல் வாழ்நாள் முழுவதும் ஆண்டவரின் பணிக்கென்றே தம்மை அரப்பணிப்போரின் மீது கொண்ட கன்னிமை அக்கறையொட்டி திருந்தந்தைப் பாரட்டியுள்ளார்.

# "ஒன்றிணைந்து, உடன்பிறந்த நிலையைக் காப்பாற்றுவோம்"

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட 'Fratelli tutti' என்ற திருமடலைப் பின்னணியாகக் கொண்டு "ஒன்றிணைந்து, உடன்பிறந்த நிலையைக் காப்பாற்றுதல்" என்ற தலைப்பில் திருஅவையின் பத்து இறையியல் அறிஞர்கள் இணைந்து, ஜூன், 8 கடந்த செவ்வாயன்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர். ஆண்டவர் ஒருவரே மீட்பர் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இல்லை என்பதை வலியுறுத்தும் இவ்வறிக்கை இறையியல் தளத்தில், மிக நுணுக்கமான விவாதங்களை மேற்கொண்ட "நான் பவுலைச் சார்ந்துள் ளேன்" என்றோ "நான் அப்பொல்லோவைச் சார்ந்துள்ளேன்" என்றோ "நான் கேபாவைச் சார்ந்துள்ளேன்" என்று பிரிவுகளை உருவாக்கும் பொருளற்ற வாதங்களைக் குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளது. திருஅவை என்பது, ஆன்மீகத்தில் மேல்நிலை மக்களைக் கொண்ட சமுதாயம் மட்டும் அல்ல, மாறாக, இறைவனுக்கும், மனிதருக்கும் இடையே உருவான உடன்படிக்கையான வானவில்லைக் கொண்டுள்ள வரவேற்புக் கூடாரம் என்ற உருவகம் இறையியல் அறிஞர்களின் அறிக்கையில் இடம்பெற்றுள்ளது. கானானிய பெண், கிணற்றடியில் சந்தித்த சமாரியப் பெண், சக்கேயு, நூற்றுவர் தலைவர் ஆகிய அனைவரையும் வரவேற்ற இயேசுவின் உள்ளம், திருஅவைக்குத் தேவை என்பதை, இறையியல் அறிஞர்கள் இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# நம்மில் நம்பிக்கை விதை துளிர்விடட்டும் - படரட்டும்

இன்று நாம் வாசிக்கக்கேட்கும் வாசகங்கள் இறையாட்சி திடீரென்று தோன்றுகின்ற ஒன்றல்ல, அது படிப்படியாக வளரக்கூடியது என்னும் செய்தியைத் தாங்கி வருகின்றன. இன்றைய முதல் வாசகத்தில் "ஆண்டவ ராகிய நான் ஓங்கிய மரத்தைத் தாழ்த்தி, தாழ்ந்த மரத்தை ஓங்கச் செய்துள்ளேன் என்றும், பசுமையான மரத்தை உலரச் செய்து, உலர்ந்த மரத்தைத் தழைக்கச் செய்துள்ளேன் என்றும், கேதுரு மரம் போல் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வேன் என்றும் நமக்கு கடவுள் வெளிப்படுத்துகிறார்.

இயற்கையாக வளரும் ஒரு விதை அல்லது கடுகு விதையின் வளர்ச்சியைக் கொண்டு இறையரசின் வளர்ச்சிக்கு இயேசு ஒப்பிடுகிறார். இறைவார்த்தை என்னும் விதையை மக்கள் மனதில் விதைத்து விட்ட ஒரு மறைப்பணியாளர் பொறுமையோடு அதன் பயனுக்காக காத்திருக்க வேண்டும் என்பதை இவ்வுவமையின் வாயிலாக உணர்த்துகிறார்.

விதையைப் போல் இறக்கின்றவர்களும் பிறருக்காக இறப்பவர்களும்தான் இறையர சுக்கு உரியவர்கள். இவ்வுண்மையின் சுருக்கத்தை இயேசு "கோதுமைமணி மடிந் தால்தான் (யோவான்12:24) என்று எடுத்துக்காட்டுகிறார். இயேசு இவ்வுலகிற்கு வந்துபோது எந்தவொரு விளம்பரமுமின்றி அமைதியாக தமது இறையரசைத் தொடக்கி வைத்தார். நாமும் நம்முடைய வாழ்வில் சிறு சிறு நற்செயல்கள் என்ற விதைகளை சமூகத்தில் மனிதரின் உள்ளத்தில் விதைத்தால் அனைவரும் வியக்கும் வண்ணம் இறைவன் அருளால் அது பெரிய ஆலமரமாக வளர்ந்து உயர்ந்து செழித்து நிற்கும்.

நம் வாழ்வில் சிறியதுதானே என எதையும் அலட்சியப்படுத்தாமல், ஒதுக்கிவிடக் கூடாது. ஏனென்றால், அவையும் மிகப் பெரிய பலன் தரக்கூடியதாக இருக்கும். அதனால்தான், "சிறுதுரும்பும் பல்குத்த உதவும்" என்றார்கள். சிறிய ஆப்பிள் பழம்தான் அன்று ஆதிப்பெற்றோரை பாவத்தில் விழ வைத்தது. நாமான் இல்லத்தில் அடிமையாய் இருந்த சிறுமிதான், அவனை எலிசாவிடம் சென்று குணமாகக் காரணமாக அமைந்தாள். அன்று, பாலைநிலத்தில் ஒரு சிறுவன் கொடுத்த இரண்டு மீன்களால்தான் ஐயாயிரம் பேர் வயிறார உண்டனர்.

இயேசு. அந்தச் சிறிய கடுகுவிதையைத்தான் விண்ணரசுக்கு ஒப்பிடுகின்றார். சிறிய, எளிய மக்களையே தம் பணிக்குத் தேர்ந்தெடுக்கின்றார். நம் வாழ்வில் எதையும் சிறியதென, சிறியவர்களென அலட்சியப்படுத்தாமல், அனைத்தும் மதிப் புக்குரியது என்பதை உணர்ந்து, அதற்குரிய, அவர்களுக்குரிய மதிப்பை, மாண்பைக் கொடுத்திட வேண்டும்.

இன்று நல்ல விதைகள் விதைப்பதற்கு பதிலாக தீமைகளே விதைகளாய் விதைக்கப்படுகின்றன. கிறிஸ்துவர்களாகிய நாம் நற்செயல்கள் என்னும் விதையை விதைப்போம். நாம் அறியாத விதத்தில் இறைவன் அதனை வளரச் செய்து மாற்றத்தை ஏற்படுத்துவார் என நம்புவோம். மேலும், சிறிய செயல்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் நாம் கவனமாக இருப்போம். நாம் பெரிய செயல்களில் கவனம் கொள்ளாமல், சின்னஞ்சிறு செயல்கள் ஒவ்வொன்றின் வழியாகவும் இறைவனின் திட்டத்தை நிறைவேற்று வோம், இறைவனை மாட்சிமைப்படுத்து வோம்.

*-சவரிநாதன், சுங்கைபட்டாணி*

**பொதுக்காலம் 11-ஆம் ஞாயிறு**

எசே 17: 22-24
திப. 92: 1-2. 12-13. 14-15
2 கொரி 5: 6-10
மாற்கு 4: 26-34

ஞாயிறு வாசகம் -ஆண்டு 2
வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1
திருப்புகழ்மாலை - வாரம் 3